### திருநங்கையர்களின் உரிமைகள், பாதுகாப்பு, வாழ்வாதார மேம்பாட்டை அடிப்படையாகக் கொண்டு

# "தமிழ்நாடு மாநில திருநங்கையர் கொள்கை - 2025"

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்!



**சென்னை, ஆக.2–**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (31.7.2025) தலைமைச் செயலகத்தில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் சார்பில் வடிவமைக்கப்பட்ட "தமிழ்நாடு மாநில திருநங்கையர் கொள்கை–2025"–யினை வெளியிட்டார்.**

அதன் விவரம் வருமாறு:-

### திருநங்கைகள் நல வாரியம் - ஒரு முன்னோடிச் சிந்தனை!

சமூகத்தில் பெண்களைப் போன்று திருநங்கைகளும் போற்றப்பட வேண்டும்; அவர்கள் கண்ணியத்துடன் அழைக்கப்பட வேண்டும் என்ற உயரிய சிந்தனையின் வெளிப்பாடாக, மரபு சார்ந்த "அரவாணிகள்" என்ற சொல்லுக்கு மாற்றாக, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் "திருநங்கை" என்ற மரியாதைக்குரிய சொல் அதிகாரப்பூர்வமாக அறிவுமுகப்படுத்தப்பட்டது.

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்ற வள்ளுவரின் ஆழமான சிந்தனைக்கு ஏற்ப, மனிதர்களுக்குள் எந்தவித ஏற்றத் தாழ்வும் இல்லை என்பதை நிலைநாட்டும் வகையில், திருநங்கைகளுக்கும் முழுமையான சமூக பாதுகாப்பு மற்றும் சமூக அங்கீகாரத்தை வழங்கி அவர்களுக்கான நலத் திட்டங்களைச் செயல்படுத்திட, இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாக 15.04.2008 அன்று தமிழ்நாட்டில் "திருநங்கைகள் நல வாரியம்" அமைத்து, இந்தச் சமூகத்திற்கு துணை நின்ற முதல் மாநிலம் நமது தமிழ்நாடு ஆகும்.

### திருநங்கையர் நலனில் தமிழ்நாடு அரசின் தொடர் கவனம்: புதிய திட்டங்களும், நீட்டிக்கப்பட்ட சலுகைகளும்!

தமிழ்நாடு அரசு, திருநங்கையர்களின் சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டை நோக்கமாகக் கொண்டு, திருநங்கைகள் நல வாரியத்தின் வாயிலாக அடையாள அட்டை, ஆதரவற்ற திருநங்கைகளுக்கு மாதம் ரூ.1500 ஒய்வூதியம், குடும்ப அட்டை, வீட்டு மனைப்பட்டா, மருத்துவக் காப்பீடு, தையல் இயந்திரம், சொந்த தொழில் தொடக்க மானியம், சுயஉதவிக்குழு பயிற்சிகள், தொழில்திறன் மேம்பாடு பயிற்சிகள் உள்ளிட்ட பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

திருநங்கைகளின் கல்வித் தடைகளை அகற்றி, உயர்கல்விப் பங்கேற்பை ஊக்குவிக்கும் விதமாக, உயர்கல்வி பயிலும் திருநங்கைகளின் கல்விக் கட்டணம், விடுதிக் கட்டணம் உள்ளிட்ட அனைத்துக் கல்விச் செலவுகளையும் தமிழ்நாடு திருநங்கைகள் நல வாரியத்தின் மூலம் அரசே ஏற்று வருகிறது.

இவற்றின் தொடர்ச்சியாக, திருநங்கை சமூகத்தின் கல்வி மேம்பாட்டினை உறுதி செய்யவும், உயர்கல்வி கற்கும் திருநங்கைகளை ஊக்குவிக்கவும் புதுமைப் பெண் மற்றும் தமிழ்ப் புதல்வன் திட்டம் மூலம் மாதம் ரூ.1000 வழங்கப்படும் கல்வி ஊக்கத் தொகை, உயர்கல்வி பயிலும் அனைத்து திருநங்கையர்களுக்கும் கிடைக்கும் வகையில் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. இது திருநங்கைகள் எந்தவித நிதிச் சுமையுமின்றி உயர்கல்வியைத் தொடரப் பெரிதும் உதவும்.

மேலும், திருநங்கைகளின் கண்ணியமான பணி வாய்ப்புகளை உறுதி செய்யும் நோக்கில், முதற்கட்டமாக சென்னை, ஆவடி மற்றும் தாம்பரம் மாநகரங்களில், ஊர்க்காவல் படையில் திருநங்கையர்களை பணியமர்த்திட அரசு முன்னெடுத்துள்ளது.

திருநங்கைகள் சந்திக்கும் சவால்களைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்குப் பாதுகாப்பான மற்றும் ஆதரவான சூழலை வழங்கும் நோக்கில், "அரண் பாதுகாப்பு இல்லம்" சென்னை மற்றும் மதுரையில் நிறுவப்பட உள்ளது. இந்த இல்லங்கள், குடும்ப ஆதரவின்றி அல்லது சமூகப் புறக்கணிப்புக்கு ஆளான திருநங்கைகளுக்குப் பாதுகாப்பான புகலிடமாகச் செயல்பட்டு, அவர்களுக்குத் தேவையான ஆதரவையும் பாதுகாப்பையும் வழங்கும்.

### தமிழ்நாடு திருநங்கையர் நலக் கொள்கை - 2025!

திருநங்கைகள் நல வாரியத்தின் வாயிலாக அடையாள அட்டை வழங்குவது முதல், சுய வேலைவாய்ப்புக்கான நிதி உதவி வரை பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வந்த நிலையில், சமூகத்தில் நீண்ட காலமாக ஒதுக்கப்பட்டு வந்த இச்சமூகத்திற்கு இன்னும் ஆழமான, கட்டமைக்கப்பட்ட மாற்றங்கள் தேவை என்பதை உணர்ந்து, வடிவமைக்கப்பட்டதே "தமிழ்நாடு மாநில திருநங்கையர் கொள்கை–2025" ஆகும்.

### "தமிழ்நாடு மாநில திருநங்கையர் கொள்கை- 2025" நோக்கம் மற்றும் இலக்கு!

"யாரையும் விட்டுவிடாத வளர்ச்சி" என்ற ஐக்கிய நாடுகள் சபையின் நிலையான வளர்ச்சி இலக்குகளின் (SDGs) கொள்கையை முழுமையாக ஏற்றுக்கொண்டு, திருநங்கையருக்கு தங்கள் அடையாளங்கள் மற்றும் உடலமைப்பில் சுய- நிர்ணயத்துடன், பாகுபாடு, வன்முறை இல்லாதவர்களாக வாழவும், தங்கள் உரிமைகளை அணுகக்கூடிய மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் ஒரு நியாயமான, சமமான மற்றும் வளமான சமூகத்தை உருவாக்குவதே இக்கொள்கையின் இலக்காகும்.

இந்தக் கொள்கை, தமிழ்நாட்டில் திருநங்கை/திருநம்பி மற்றும் இடைநிலை பாலினத்தவர்களின் முழுமையான சமூக ஒருங்கிணைப்பு, கண்ணியம் மற்றும் உரிமைகளைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**திருநங்கைகள் கொள்கையின் முக்கிய அம்சங்கள்!**

- **அடிப்படை உரிமைகளுக்கு முன்னுரிமை**
- **சட்டப்பூர்வ அங்கீகாரம் மற்றும் பாதுகாப்பு**
- **அடையாள ஆவணங்களின் தேவை**
- **திறன் மேம்பாடு மற்றும் வேலை வாய்ப்பு**
- **கல்வியில் சமத்துவ அணுகுமுறை**
- **சுகாதாரப் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பான வாழ்க்கை**
- **சமூக நீதி மற்றும் பிரதிநிதித்துவம்**
- **குறைதீர்ப்பு முறைகள் மற்றும் விழிப்புணர்வு**
- **செயல்பாடு மற்றும் கண்காணிப்பு கட்டமைப்பு**

### செயலாக்கம் மற்றும் கண்காணிப்பு!

திருநங்கைகள் நல வாரியம், மாநில அளவில் ஆலோசனை அமைப்பாகவும், திருநங்கை சமூகத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பல்வேறு நலத்திட்டங்களைச் செயல்படுத்தும் அமைப்பாகவும் செயல்படும். இந்தக் கொள்கையின் செயல்பாடுகள், அரசின் பல்வேறு துறைகள் மற்றும் பங்குதாரர்களின் பங்கேற்புடன் செயல்படுத்தப்பட உள்ளது.

**மாநிலத் தளத்தில் :**

அரசு தலைமைச் செயலாளர் தலைமையிலான ஒரு உயர் மட்டக் குழு, அனைத்து தொடர்புத் துறைகளையும் உள்ளடக்கி, ஆறு மாதங்களுக்கு ஒருமுறை கூடி, திருநங்கையருக்கான திட்டங்கள், சட்டங்களை உருவாக்குவது குறித்து அரசுக்கு ஆலோசனை வழங்குதல், திட்டங்களின் தாக்கத்தை கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல், கொள்கையின் செயல்திறனை காலமுறை மறுபரிசீலனை செய்தல் மற்றும் தேவையான திருத்தங்களை பரிந்துரைத்தல் போன்ற பணிகளை மேற்கொள்ளும்.

**மாவட்டத் தளத்தில் :**

இதேபோல், மாவட்ட ஆட்சியர் தலைமையிலான மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூடி, திருநங்கையருக்கான சமூக, பொருளாதார மற்றும் அரசியல் வளர்ச்சிக்கான திட்டங்களை அமல்படுத்துதல் மற்றும் கண்காணித்தல். திருநங்கையர் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மற்றும் அவர்களின் குறைகளை நிவர்த்தி செய்திட காலமுறை குறைதீர்ப்பு கூட்டத்தினை நடத்துதல் போன்ற பணிகளை மேற்கொள்ளும்.

தமிழ்நாட்டின் இந்தத் திருநங்கையருக்கான நலக் கொள்கையானது, ஒரு நிர்வாக ஆவணமாக மட்டுமில்லாமல், மனித உரிமை, சமத்துவம் மற்றும் சுயமரியாதை ஆகியவற்றை உறுதிப்படுத்தும் ஒரு சமூகச் சான்றாக அமைந்துள்ளது. சமூக, பொருளாதார மற்றும் அரசியல் உரிமைகளை நிலைநாட்டுவதன் மூலம், இக்கொள்கை ஒரு நவீன சமூக மாற்றத்திற்கான அடித்தளமாக அமைக்கப்பட்டுள்ளது.

இக்கொள்கை ஒடுக்கப்பட்ட பாலின அடையாளங்களுக்கான உரிமைகளைச் சட்டபூர்வமாக ஏற்றுக்கொள்வதுடன், சமூகத்தில் அவர்களுக்கான இடத்தை உறுதி செய்து, பன்முகச் சமூகத்தைக் கட்டமைக்க முனைகிறது. அரசு வழங்கும் இந்த உரிமைகள், அவர்களுக்குச் செய்யப்படும் உதவிகள் அல்ல; மாறாக, அவை அவர்களின் உண்மையான உரிமைகள் என்பதை இக்கொள்கை தெளிவுபடுத்துகிறது. திருநங்கையர்களும் சமுதாயத்திற்குப் பங்களிக்கத் தயாரான முழுமையான குடிமக்கள் ஆவர். அவர்களை நம்மோடு ஒப்பாக வாழவைப்பது நம் அரசின் கடமையாகும் என்பதை இந்தக் கொள்கை வலியுறுத்துகிறது.

இந்நிகழ்ச்சியில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி. பி. கீதாஜீவன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை செயலாளர் திருமதி. ஜெயஸ்ரீ முரளீதரன், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை கூடுதல் செயலாளர் திருமதி ச. வளர்மதி, சமூக நல இயக்குநர் திருமதி. மா.செள.சங்கீதா, மாநில திட்டக்குழு உறுப்பினர் முனைவர் நர்த்தகி நடராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

---



## தி.மு.க. இளைஞர் அணி

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

### ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

தூத்துக்குடி தெற்கு மாவட்டத்தில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 09.08.2025 சனிக்கிழமை | காலை 9.00 மணி | தூத்துக்குடி தெற்கு | சத்யா மஹால், புதுக்கோட்டை. |

### சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைதளப் பயிற்சி!

பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைதளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம்–2–இல் ஆவடி, மண்டலம்–9–இல் ஒட்டப்பிடாரம், திருச்செந்தூர் மற்றும் திருவைகுண்டம் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளில் நடைபெறும் சமூக வலைதளப் பயிற்சி குறித்த விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|
| 03.08.2025 ஞாயிற்றுக்கிழமை | மாலை 3.00 மணி | ஆவடி | ஜெய் கிரீஷ் திருமண மண்டபம், தண்டுரை, பட்டாபிராம், திருவள்ளூர். |
| 09.08.2025 சனிக்கிழமை | மாலை 3.00 மணி | ஒட்டப்பிடாரம் | சத்யா மஹால், புதுக்கோட்டை. |
| 10.08.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 9.00 மணி | திருச்செந்தூர் | ஐ.எம்.ஏ. மஹால், திருச்செந்தூர். |
| | மாலை 3.00 மணி | திருவைகுண்டம் | மல்லிகை மஹால், ஆத்தூரான்கால். |

அன்பகம்
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 30.07.2025

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

---

### திண்டிவனத்தில் - விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க.

## பொறியாளர் அணி ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

**விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. எஸ்.கே.பி.கருணா சிறப்புரை! பிரதீப் தலைமை! செந்தில் முருகன் வரவேற்புரை!**

திண்டிவனம் ஆக 1.

திண்டிவனத்தில் இன்று நடைபெறும்விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக பொறியாளர் அணி ஒன்றிய, நகர ,பேரூர் கழக நிர்வாகிகள் அறிமுக கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம். எல்.ஏ., மாநில பொறியாளர் அணி செயலாளர் எஸ். கே. பி கருணா ஆகியோர் சிறப்புரை ஆற்றுகின்றனர் ,மாநில பொறியாளர் அணி துணைத் தலைவர் பிரதீப் தலைமை தாங்குகிறார்,மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் செந்தில் முருகன் அனைவரையும் வரவேற்கிறார்.

விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக பொறியாளர் அணி ஒன்றிய, நகர, பேரூர் கழகநிர்வாகிகள் அறிமுக கூட்டம் இன்று (2. 8. 2025 சனிக்கிழமை) காலை 10 .00மணிக்கு திண்டிவனம் ஹோட்டல் ஆர்யாஸ் கார்டனில் நடைபெறுகிறது.கூட்டத்திற்கு மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளரும்,பொறியாளர் அணி கடலூர் மண்டல பொறுப்பாளர் சி. பிரதீப் தலைமை தாங்குகிறார்.விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறியாளர் அணி தலைவர் சக்தி சரவணன், மாவட்ட துணைத் தலைவர் டிபி ஏழுமலை, மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர்கள் ஜிபிஎஸ் முருகன், ரசூல் பாஷா, சரவணன், சிவப்பிரகாசம், வெங்கடேச பெருமாள், மலையரசன், மோகன்தாஸ் ,பிரபாகரன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் ஜி.எஸ்.செந்தில் முருகன் அனைவரையும் வரவேற்கிறார்.

கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளரும் ,செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான செஞ்சி மஸ்தான், பொறியாளர் அணி மாநில செயலாளர் எஸ். கே. பி.கருணா ஆகியோர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுகின்றனர்.திண்டிவனம் நகர பொறியாளர் அணி அமைப்பாளர் வெங்கடேசன் நன்றி கூறுகிறார்.

கூட்டத்தில் மாநில ,மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், மாவட்ட ஒன்றிய நகரப் பேரூர் பொறியாளர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளிட்ட அனைவரையும் கலந்து கொள்கின்றனர்.

கூட்டத்தில்புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக பொறியாளர் அணி நிர்வாகிகள் அறிமுகம், கழகத் தலைவர் முதலமைச்சர் மு .க . ஸ்டாலின் அவர்களின் உத்தரவுப்படி ஓரணியில் தமிழ்நாடு கருத்தினை பொறியாளர் அணி சார்பில் முன்னெடுத்தல் ,விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள கிளைகள் தோறும் பொறியாளர் அணி உறுப்பினர்களை சேர்த்தல் உள்ளிட்ட கழக ஆக்கப் பணிகள் குறித்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட உள்ளது.



கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகராட்சி, 48வது வார்டுக்குட்பட்ட சதாவதானி செய்குதம்பி பாவலர் அரசு தொடக்கப் பள்ளியில் ரூ. 8.50 இலட்சம் மதிப்பீட்டில் சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்ட பள்ளி கட்டிடத்தை மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் திறந்து வைத்தார். நிகழ்வில் நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் நிஷாந்த் கிருஷ்ணா, துணை மேயர் ம.மேரி பிரன்சி லதா, மண்டலத் தலைவர் கு.அகஸ்டினா கோகிலவாணி, ரகுராமன், சுஜின், ராஜசீலி, தேவி, எம்.எ.பியாசா ஹாஜிபாபு, சூ.அமல செல்வன், பொ.சொர்ணத்தாய், அருள் சபிதா ரெக்ஸலின், ஐயப்பன், சேக்மீரான், என்.பி.துரை, த.ஜீவா மற்றும் கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.